# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 7 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | வயது | |
| தகப்பனார் பெயர் | சிவக்குமார் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருத்தணி பக்கத்தில் பொதட்டூர்பேட்டையில் வசித்து வந்து என்.ரெங்காராவ் என்ற சைக்கிள் கம்பெனியில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்கள் மற்றும் பட்டியல் சாட்சிகள் ராஜேந்திரன், முருகதாஸ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி சக்திவேலிடம்தான் பணத்தை கொடுத்தோம். எனக்கு ஆஜர் எதிரிகள் யாரையும் முதலில் தெரியாது. என் நண்பர்களான சுரேஷ், தாசன், அழகர் ஆகியோர்கள் மூலமாகத்தான் எதிரி சக்திவேலை தெரியும். கடந்த 13.02.2018 ம் தேதி நாங்கள் ஏழு பேரும் எதிரி சக்திவேலின் வீட்டிற்கு சென்று தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.7 லட்சம் பணமும், எங்கள் பயோ டேட்டாவும் சேர்த்து அவர் எங்களுக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னதால் பணத்தை கொடுத்தோம். பின்னர் ஒரு மாதம் கழித்து வேலை வந்துவிடும் என்று சொன்னார். ஆனால் அவர் சொன்னபடி வேலை வரவில்லை. அதனால் மீண்டும் ஒரு மாதம் கழித்து அவரிடம் சென்று கேட்டோம். அவர் மே மாதம் என்பதால் நீதிமன்றம் விடுமுறையாக உள்ளது என்றும், அதனால் ஜூன் மாதத்தில் வேலை வந்துவிடும் என்று சொன்னார். நாங்கள் மூன்று முறை அவரிடம் சென்று கேட்டபோது இதே பதிலைதான் சொன்னார். பிறகும் நானும், என் நண்பர்களும் சேர்ந்து எதிரி சக்திவேலிடம் எங்களுக்கு வேலை கிடைக்குமா, இல்லையா என்று கேட்டதற்கு

அவர் உங்களுக்கு வேலை கிடைத்துவிடும், வேலை கிடைக்கவில்லை என்றால் உங்கள் பணத்தை நான் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். ஆனால் ஒரு வருடம் வரை அவர் எந்த வேலையும் எங்களுக்கு வாங்கி தரவில்லை. அதனால் மீண்டும் சென்று அவரிடம் கேட்டோம். அப்போது எதிரி சக்திவேல் உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீங்களே ரூ.20 பத்திரத்தை வாங்கி வாருங்கள் என்றும் அதில் பணத்திற்கான உறுதியை எழுதி தருவதாகவும் சொன்னதால் நான் சென்று என் பெயரில் ரூ.20 க்கான பத்திரத்தை வாங்கி வந்து எதிரி சக்திவேலிடம் கொடுத்தேன். அதில் எதிரி சக்திவேல் வேலை வரவில்லை என்றால் என்னிடம் வாங்கிய ரூ.1 லட்சம் பணத்தை அசல் வட்டி சேர்த்து தருவதாக கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் என் பெயரில் உள்ள ரூ.20 க்கான பத்திரம் அ.த.சா.ஆ.6 ஆகும். மேலும், அன்றைய தினமே நாங்கள் ஏழு பேரும் சேர்ந்து அவரிடம் எங்களுக்கு தனித்தனியாக எழுதிக்கொடுத்த பத்திரத்தை கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து ரூ.20 பத்திரத்தில் என்னையும் சேர்த்து என் நண்பர்கள் உள்ளிட்ட 7 பேருக்கும் வேலை வாங்கி தரவில்லை என்றால் பணத்தை வட்டியுடன் திருப்பி தருவதாக எழுதி கொடுத்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.3 பத்திரம் எதிரிகளால் எழுதி கொடுக்கப்பட்டதுதான். பின்னர் ஒரு வருட காலமாக வேலை வாங்கி தராமல் ஏமாற்றிக்கொண்டு இருந்ததாலும், அதே சமயத்தில் எங்களில் ஒருவரான சக்திவேல் என்பவருக்கு அரசு வேலை கிடைத்துவிட்டதால் அவருடைய பணத்தையாவது தாருங்கள் என்று எல்லோரும் சேர்ந்து கேட்டபோது அவர்கள் காலம் தாழ்த்தி பின்னர் ஆஜர் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் நீதிமன்றத்திற்கு சென்று பணம் கேட்கலாம் என்று சென்றபோது என் நண்பர்கள் முன்னிலையில் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டார் என்று சொன்னார்கள். பின்னர் இதேபோல் தொடர்ந்து வேலையும் கிடைக்கவில்லை, பணத்தையும் தரவில்லை அதனால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொல்லி ஏழு பேரும் திருவாரூரில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பக்கத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்று,அதில் அ.சா.1 சுரேஷ் புகார் கொடுத்தார். பின்னர் இதே போல் பலநபர்கள் என்னை போன்று பாதித்துள்ளனர் என்று கேள்விபட்டேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன்.

அ.சா.1 எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 10 வருடமாக பழக்கம். சுரேஷ் யார் மூலமாக எனக்கு பழக்கமானார் என்றால் தாசன், அழகர் மூலமாக எனக்கு பழக்கமானார். நீதிமன்றத்தில்பணியிடம் காலியாக உள்ளது என்று என்னிடம் யார் சொன்னது என்றால் அழகரும், தாசனும் சொன்னார்கள். அழகர், தாசனுக்கு எப்படி தெரியும் என்றால் அ.சா.1 சுரேஷ் சொன்னதாக சொன்னார்கள். முதலில் எனக்கு யார் சொன்னது என்றால் தாசனும், அழகரும் சொன்னார்கள். அதனால் நானும், அ.சா.1 சுரேசுக்கு போன் செய்து கேட்டேன். அதற்கு அ.சா.1 என்ன சொன்னார் என்றால் நீதிமன்றங்களில் காலிபணியிடம் உள்ளது என்றும், சென்னையிலும் உள்ளது என்றும் சொன்னார். அப்போது சுரேஷ் என்ன சொன்னார் என்றால் பணம் கொடுத்து ஒரு மாதத்தில் வேலை வந்துவிடும் என்பதாக சொன்னார். என்ன வேலை என்று நான் அவரிடம் கேட்டேனா என்றால் நீதிமன்றத்தில் வேலை என்று சொன்னார். அந்த வேலையை எப்படி வாங்கமுடியும் என்று கேட்டேனா என்றால் இல்லை. 1வது எதிரி சக்திவேல் என்னிடம் அதுவரையில் நேரடியாக பணம் எதுவும் கேட்டகவில்லை என்றால் சரிதான். பிறகு சுரேஷ் என்னிடம் என்ன சொன்னார் என்றால் வேலைக்கான பணத்தை 1வது எதிரி சக்திவேலிடம் கொடுக்கவேண்டும் என்றும், அதனால் வரும்படியும் சொன்னார். நாங்கள் 1வது எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது அவரது மனைவி மாலதி உடன் இருந்தாரா என்றால் இருந்தார். 1வது எதிரி சுரேசின் மனைவியும் எங்களிடம் உங்களுக்கு எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்று உறுதியளித்தார். நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 13.02.2018ம் தேதியன்று கொடுத்தேன். பணம் கொடுத்தபோது நான் வேறு என்ன கொடுத்தேன் என்றால் விண்ணபப்பம், பயோ டேட்டா, போட்டோ, ஆதார் கார்டு உள்ளிட்ட ஆவணங்களை கொடுத்தேன். பணம் கொடுத்ததற்காக அன்றைய தினமே அத்தாட்சி ஏதாவது பெற்றேனா என்றால் இல்லை. நான் பயோ டேட்டா கொடுத்தபோது இரண்டு எதிரிகளும் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் 2 வது எதிரியிடம் பேசினேனா என்றால் பேசவில்லை. 1வது எதிரியிடம்தான் பேசினேன். நான் அதன்பிறகு 1வது எதிரியின் வீட்டிற்கு எத்தனை முறை சென்றுள்ளேன் என்றால் மூன்று முறை சென்றுள்ளேன். தேதி ஞாபகம் உள்ளதாக என்றால் தேதி ஞாபகம் இல்லை. 2018ம் வருடத்தில்தான் மூன்றுமுறை சென்றேன். 1வது எதிரி சக்திவேலிடம் நாங்கள் கேட்டபோது அவர் என்ன சொன்னார் என்றால் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாக சொன்னார். நான் 2வது எதிரியிடம்

பேசினேனா என்றால் இல்லை. என் நண்பர் பேசினாரா என்றால் சுரேஷ் பேசியுள்ளார். அதற்கு 2வது எதிரி என்ன சொன்னார் என்றால் நீதிமன்றத்தில் உள்ள இன்னொரு நபரிடம் கொடுத்துள்ளதாகவும் அதனால் வேலை வந்துவிடும் என்றும் சொன்னார். நீதிமன்றத்தில் உள்ள எந்த நபர் என்று குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. 2வது எதிரி கோவிந்தலெட்சுமி திருவாரூர் நீதிமன்றத்தில்தான் வேலை செய்து வந்தாரா என்றால் வேலை செய்து வந்தார். அதனால் எங்களுக்கு எப்படியும் அரசு வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது என்றால் சரிதான். பிறகு நான் 2வது எதிரியை பார்த்தேனா என்றால் என் நண்பர் சக்திவேலுக்கு அரசு வேலை கிடைத்தபின்பு அவரது பணத்தை திரும்ப கேட்க சென்றபோது 1வது மற்றும் 2வது எதிரிகள் இருந்தார்கள். இருவரிடமும் கேட்டோம். தாசனும், தர்மராஜும் நீதிமன்றத்திற்கு சென்று 2வது எதிரியிடம் கொடுத்த பணத்தை திரும்ப கேட்ட விஷயம் எனக்கு எப்படி தெரியும் என்றால் தாசன் என்னிடம் சொன்னார். அன்றைய தினம் 2வது எதிரி மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சசி என்பவர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேலும் 83 நபர்கள் பணம் கொடுத்து ஏமாந்து உள்ளார்கள் என்ற விபரத்தை நான் எப்படி தெரிந்துக்கொண்டேன் என்றால் அ.சா.1 சுரேஷ் என்னிடம் சொன்னார். கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டதால் எங்களுக்கு பணம் கிடைக்காது என்பதால் நாங்கள் சக்திவேலிடம் பணம் கேட்டு அ.த.சா.ஆ.6 பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6 பத்திரத்தின் மீது எங்களுக்கு சந்தேகம் வந்ததால் அ.த.சா-ஆ.3 பத்திரத்தை நாங்கள் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். தற்போது நாங்கள் கொடுத்த பணம் யாரிடம் உள்ளது என்றால் தெரியவில்லை. சுரேசிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 சுரேசிடம் கேட்டபோது என்ன சொன்னார் என்றால் 1வது எதிரி சக்திவேலிடமும், 2வது எதிரி கோவிந்தலெட்சமியிடமும் உள்ளது என்று சொன்னார். ஆனால் 1வது எதிரியிடம் கேட்டபோது 2வது எதிரியிடம் உள்ளது என்றும், 2வது எதிரியிடம் கேட்டபோது 1வது எதிரியிடம் உள்ளது என்று மாற்றி, மாற்றி சொல்லி வருகிறார்கள். 1வது எதிரி 2வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமாந்ததாக போலிசில் புகார் கொடுத்துள்ளரர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 சொன்னார். 1வது எதிரி 2வது எதியிடம் பணம் கொடுத்து ஏமாந்துள்ளரர் என்றாலும், 1வது எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான்

அ.சா.1 க்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் போலிசார் விசாரணையில் அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா-ஆ.6 ஆகியவை தனித்தனியாக ஒரே எழுதப்பட்டது என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல என் நண்பர்கள் நீதிமன்றம் சென்று 2 வது எதிரியிடம் பணம் கேட்டபோது நண்பர்கள் முன்னிலையில் 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த விபரங்கள் வழக்கிற்காக தற்போது முதல்முறையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா-ஆ.3 ஆவணத்தை 2 வது எதிரி எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அதில் உள்ள கையெழுத்தும் 2 வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றாலும் சரியல்ல. அ.த.சாஆ.6 01.03.2019 ம் தேதியன்று எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2 வது எதிரியால் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.த.சா.ஆ.3 ஆவணம் 04.02.2019 ம் தேதியன்று எழுதிக்கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால்சரிதான். பணம் கொடுத்தபோது இரண்டு எதிரிகளும் இருந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாசனும், தர்மராஜும் நீதிமன்றம் சென்று 2 வது எதிரியிடம் பணத்தை கேட்டபோது மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டார் என்ற விபரத்தை முதல்விசாரணையிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.1 சுரேஷ் என்னிடம் எங்களிடம் வாங்கிய பணத்தை நீதிமன்றத்தில் வேலைக்காக வேறுறொரு நபரிடம் கொடுத்திருப்பதாக சொன்ன விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 2 வது எதிரியை இணைத்து சாட்சியமளித்தால்தான் பணம் கிடைக்கும் என்று 1 வது எதிரி கூறிய ஆசை வார்த்தையால்தான் நான் துாண்டப்பட்டு முதல் விசாரணையிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லாத விபரங்களை 2 வது எதிரியை இணைத்து 1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையில் புதிய சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 2 வது எதிரியை எந்த காலத்திலும் சந்தித்தது இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 வது எதிரியை சந்தித்துள்ளேன்.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 8 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | வயது | |
| தகப்பனார் பெயர் | நடேசன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் ஓவரூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.2 எனது மருமகன் ஆவார். அ.சா.1,ம் , அ.சா.3 ம் எனது மருமகனின் உடன்பிறந்த சகோதரர்கள். அ.சா.7 தினேஷ் மற்றும் ஆஜர் 1வது எதிரி சக்திவேலை தெரியும். ஆஜர் 2 வது எதிரி கோவிந்தலெட்சமி மற்றும் பட்டியல் சாட்சிகள் யாரையும் எனக்கு தெரியாது. அ.சா.1 சக்திவேலை எனக்கு என் மருமகன் தாசனுக்கு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தரவதாக சொல்லி ஒரு லட்சத்தில் ரூ.40 ஆயிரம் பணத்தை நான் ஏற்பாடு செய்து அவரின் வீட்டிற்கு போய் கொடுக்கும்போது எனக்கு அவரை தெரியும். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக என் மருமகன் தாசனுக்கு வேலை வாங்கி தருவதாக சொல்லி என் மருமகன் பணத்தை கொடுத்து ஏமார்ந்து பலமுறை ஆஜர் 1வது எதிரியிடம் கேட்டும், கிடைக்காததாலும் நாங்கள் அதேவேலையாக இருந்து ஆஜர் 1வது எதிரியை பலமுறை நானும் நேரடியாக கேட்டும் பணம் கிடைக்கவிலலை. பிறகு ஒரு வருடம் கழித்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ஒரு வேலை சம்பந்தமாக சென்றபோது மருமகன் தாசன் எனக்கு தொலைபேசி மூலம் திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜர் 1வது எதிரியை கைது செய்து வைத்திருப்பதாகவும், உடனே அங்கு செல்லுங்கள் என்று கூறியதால் நான் அங்கு சென்று பார்த்தபோது ஆஜர் 1வது எதிரியை கைது செய்து வைத்திருந்தனர்.பின்னர் ஆஜர் 1வது எதிரி ஏதோ

போலிசாரிடம் சொன்னதை போலிசார் பதிவு செய்து என்னிடம் இரண்டு ஆவணங்களில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ராஜேந்திரன் என்ற கையெழுத்தும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள ராஜேந்திரன் என்ற கையெழுத்தும் நான் போட்டதுதான். அந்த கையெழுத்துக்கள் முறையே அ.த.சா.ஆ.7,8 ஆகும். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களில் என்னுடன் இன்னொரு பையனும் கையெழுத்து போட்டான்.எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை இது சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தர்ப்பு வேண்டுகோளின்படி அனுமதியளித்து அரசு தரப்பு கு.வி.**

கடந்த 08.04.2019 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு ஒரு வேலை சம்பந்தமாக சென்றிருந்ததாகவும், அப்போது என்னுடன் முருகதாசும் வந்திருந்ததாகவும், அதே நேரத்தில் ஆஜர் 1வது எதிரி சக்திவேலை போலிசார் கைது செய்து வைத்திருந்ததாகவும் பின்னர் எங்கள் இருவரையும் போலிசார் 1வது எதிரி சக்திவேலிடம் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கச்சொன்னதாகவும், உடன் எங்கள் இருவர் முன்னிலையில் சக்திவேல் தானாக முன்வந்து ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் 2 வது எதிரி கோவிந்தலெட்சமி தன்னுடைய வீட்டில் வாடகைக்கு குடி வந்ததாகவும், அப்போது அவர் ரூ.4 லட்சத்தை கடனாக பெற்றதாகவும் மேற்சொன்ன பணத்தை திருப்பி தர முடியாததால் 1வது எதிரி சக்திவேலிடம் 2 வது எதிரி கோவிந்தலெட்சமி தான் நீதிமன்றத்தில் வேலை செய்வதாகவும் நீதிமன்றத்தில் உள்ள காலி பணியிடம் சம்பந்தமாக விளம்பரம் வரும்போது தான் நீதிமன்றத்தில் அதிக காலி பணியிடங்கள் இருக்கு என்று சொல்லி பணம் சம்பாதித்து தங்களுக்கு தருவதாகவும் என்றும், அதேபோல்தான் 13.02.2018 ம் தேதி சுரேஷ் தலைமையில் ஏழு நபர்கள் உட்பட தலா ரூ.1 லட்சம் வீதம் ஏழு லட்சத்தை பெற்றுக்கொண்டதாகவும், அந்த பணத்தை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்ததாகவும், பின்னர் பலமுறை, பலதேதிகளில் சுரேஷ் உட்பட ஏழு நபர்கள் தன்னிடம் பணத்தை கேட்டதாகவும், அதற்கு தான் பலகாரணங்கள் சொன்னதாகவும், இதே போல்தான் பலமுறை சொல்லி அவரிகளை ஏமாற்றியதாகவும் பின்னர் 28.02.2019 ம் தேதி ஏழு நபர்களிடமும் வாக்குவாதம் நடத்தி அதற்கு ரூ.20 ரூபாய் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அதன்பின்னர் பணத்தை கொடுக்கவில்லை என்றால்

நாங்கள் நீங்கள் என்ன சொல்கிறீர்களோ கேட்கிறோம் என்று சொன்னதாகவும், பலமுறை தலைமறைவாக இருந்ததாகவும், அதேபோல் ஒரு நாள் தனக்கு வங்கியில் வேலை இருப்பதாக வந்து வங்கிக்கு வந்தபோது போலிசாராகிய நீங்கள் பிடித்து கைது செய்ததாகவும் என்று சொல்லி குற்றத்தை ஒத்துக்கொண்டு ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், தன்னை தன் வீட்டிற்கு அழைத்து சென்றால் சாட்சி 1 சுரேஷ் உட்பட ஏழு நபர்களின் பயோ டேட்டா மற்றும் ஆவணங்களையும், அவர்களை போலவே 83 நபர்களிடமும் பணத்தை ஏமாற்றி பறித்ததாகவும் அது தொடர்புடைய நோட்டு புத்தகங்களையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொல்லி உடன் நாங்கள் இருவரும் 1வது எதிரியுடன் அவரது வீட்டிற்கு சென்று 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்த நோட்டு புத்தகங்கள் (பத்திரங்கள்) போலிசார் அதே இடத்தில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயரர் செய்ததாகவும், போலிசார் எங்களை விசாரித்தபோது விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வயது முதிர்வின் காரணமாக ஞாபகம் மறதியின் பேரில், மேலும் இதனால் தாசன் என் மருமகனின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்றதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 9 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகதாஸ் | வயது | |
| தகப்பனார் பெயர் | ஜெகநாதன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கோமல் கிராமத்தில் வசித்து வந்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.6 சக்திவேலை தெரியும். வேறு யாரையும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முருகதாஸ் என்ற கையொப்பமும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பமும் என்னுடையதல்ல. எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. நான் நீதிமன்றத்தின் அழைப்பணை பெற்று சாட்சியமளிக்க வந்துள்ளேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தர்ப்பு வேண்டுகோளின்படி அனுமதியளித்து அரசு தரப்பு கு.வி.**

கடந்த 08.04.2019 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு ஒரு வேலை சம்பந்தமாக சென்றிருந்ததாகவும், அப்போது என்னுடன் ராஜேந்திரன் என்பவர் வந்திருந்ததாகவும், அதே நேரத்தில் ஆஜர் 1வது எதிரி சக்திவேலை போலிசார் கைது செய்து வைத்திருந்ததாகவும் பின்னர் எங்கள் இருவரையும் போலிசார் 1வது எதிரி சக்திவேலிடம் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கச்சொன்னதாகவும், உடன் எங்கள் இருவர் முன்னிலையில் சக்திவேல் தானாக முன்வந்து ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி தன்னுடைய

வீட்டில் வாடகைக்கு குடி வந்ததாகவும், அப்போது அவர் ரூ.4 லட்சத்தை கடனாக பெற்றதாகவும் மேற்சொன்ன பணத்தை திருப்பி தர முடியாததால் 1 வது எதிரி சக்திவேலிடம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி தான் நீதிமன்றத்தில் வேலை செய்வதாகவும் நீதிமன்றத்தில் உள்ள காலி பணியிடம் சம்பந்தமாக விளம்பரம் வரும்போது தான் நீதிமன்றத்தில் அதிக காலி பணியிடங்கள் இருக்கு என்று சொல்லி பணம் சம்பாதித்து தங்களுக்கு தருவதாகவும் அதேபோல்தான் 13.02.2018 ம் தேதி சுரேஷ் தலைமையில் ஏழு நபர்கள் உட்பட தலா ரூ.1 லட்சம் வீதம் ஏழு லட்சத்தை பெற்றுக்கொண்டதாகவும், அந்த பணத்தை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்ததாகவும், பின்னர் பலமுறை, பலதேதிகளில் சுரேஷ் உட்பட ஏழு நபர்கள் தன்னிடம் பணத்தை கேட்டதாகவும், அதற்கு தான் பலகாரணங்கள் சொன்னதாகவும், இதே போல்தான் பலமுறை சொல்லி அவர்களை ஏமாற்றியதாகவும் பின்னர் 28.02.2019 ம் தேதி ஏழு நபர்களிடமும் வாக்குவாதம் நடத்தி அதற்கு ரூ.20 ரூபாய் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அதன்பின்னர் பணத்தை கொடுக்கவில்லை என்றால் நாங்கள் நீங்கள் என்ன சொல்கிறீர்களோ கேட்கிறோம் என்று சொன்னதாகவும், பலமுறை தலைமறைவாக இருந்ததாகவும், அதேபோல் ஒரு நாள் தனக்கு வங்கியில் வேலை இருப்பதாக வந்து வங்கிக்கு வந்தபோது போலிசாராகிய நீங்கள் பிடித்து கைது செய்ததாகவும் என்று சொல்லி குற்றத்தை ஒத்துக்கொண்டு ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், தன்னை தன் வீட்டிற்கு அழைத்து சென்றால் சாட்சி 1 சுரேஷ் உட்பட ஏழு நபர்களின் பயோ டேட்டா மற்றும் ஆவணங்களையும், அவர்களை போலவே 83 நபர்களிடமும் பணத்தை ஏமாற்றி பறித்ததாகவும் அது தொடர்புடைய நோட்டு புத்தகங்களையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொல்லி உடன் நாங்கள் இருவரும் 1 வது எதிரியுடன் அவரது வீட்டிற்கு சென்று 1 வது எதிரி எடுத்து ஆஜர் செய்த நோட்டு புத்தகங்கள் (பத்திரங்கள்) போலிசார் அதே இடத்தில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயரர் செய்ததாகவும், போலிசார் எங்களை விசாரித்தபோது விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து முழுமையாக விலகி ஆஜர் 1 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் பற்றி எதுவும் தெரியாது என்றும் அதில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையதல்ல என்றும் உண்மைக்கு மாறாக 1 வது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்றதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.